# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : S.T.C. 411/2023**

**Prosecution witness : ம.சா. 1** **Date : 21.09.2024**

| Name : பரசுராமன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** என்னுடைய வங்கி கணக்கு எங்குள்ளது என்றால் மேட்டுர் ஆர்.எஸ் கிளையில் இந்தியன் வங்கி என்ற பெயரில் உள்ளது. நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கு காசோலையானது சிந்து பேபரிக்ஸ் என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சிந்து பேபரிக்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் யார் என்றால் நான்தான். சிந்து பேபரிக்ஸ் என்ற நிறுவனத்தை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக காண்பித்துள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு சிந்து பேபரிக்ஸ் என்ற நிறுவனத்தை சேர்க்காமல் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. எதிரி அளித்தாக சொல்லப்படும் காசோலையில் Akshaya enterprises என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Akshaya enterprises என்ற நிறுவனத்தை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக காண்பித்துள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு சிந்து பேபரிக்ஸ் என்ற நிறுவனத்தை சேர்க்காமல் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. யார் காசோலையை கொடுத்தார்கள் என்றால் பாலன் என்பவர் வழங்கினார். அதில் யார் காசோலையை பூர்த்தி செய்தார்கள் எனக்கு தெரியாது. வரும் போது பூர்த்தி செய்து கொண்டுவந்தார்கள். காசோலையில் உள்ள கையெப்பம் என்

முன்பாக போடப்பட்டதா என்றால் இல்லை. பாலன் என்பவர் தன்னுடைய மனைவி கையொப்பம் செய்து கொடுத்தாக என்னிடம் சொன்னார். மேற்சொன்ன சங்கதிகளை தான் எனது முதல்விசாரணை புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

4. இந்த வழக்கு எதிரி மீது தவறுதலாக தாக்கல் செய்துள்ளேன் என்றும், வழக்கு காசோலை எதிரினுடைய காசோலை இல்லை என்றால் சரியல்ல. பாலன் என்னிடம் அவருடைய மனைவி அவருக்கு Cheque power கொடுத்துள்ளதாக என்னிடம் கூறினார். இந்த காசோலை எதிரினுடைய இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டி ஒன்றாகும் என்றால் சரியல்ல.

5. எதிரி அல்லது அவரது மனைவி எனக்கு எந்த விதமான பணமும் கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி நடத்திவரும் நிறுவனத்தில் நான் ஒப்பந்த வேலை எடுத்த காரணத்தால் Account details க்காக வெற்று காசோலை எந்த விதமாக பூர்த்தி செய்யாமல் என்னிடம் ஒரு காசோலை கொடுத்து வைத்திருந்தார் என்றால் இல்லை. நானே காசோலையில் கையொப்பம் செய்து துர்லாபம் அடையவேண்டி பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை.

6. என் வங்கி கிளை மேட்டுர் ஆர்.எஸ் என்றும் இது Cross cheque என்பதால் ஒருவருடைய வங்கி கணக்கு மூலமாக மட்டுமே பணமாக்க முடியும் என்பதால் எனது வங்கி கிளையில் மட்டுமே தாக்கல் செய்ய முடியும் என்றால் அவ்வாறு இல்லை. நான் என்னுடைய வங்கியை அணுகியபோது காசோலையில் உள்ள கையொப்பம் மாறுபாடு உள்ளதாக சொல்லி எதிரியின் வங்கி கணக்கில் தாக்கல் செய்ய அறிவுறுத்தினார்கள். நான் எதிரி வங்கியை அணுகிய போது பணம் போதிய அளவில் உள்ளதாகவும் பணமாக்கப்படும் உறுதி கூறியதால் நான் வந்துவிட்டேன்.

**மறுவிசாரணை இல்லை**

**ஓம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**